வாசிக்க: மாற்கு 7:14-23

***"எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள்; அதிலிருந்துதான் வாழ்க்கையின் காரியங்கள் புறப்படும்" (நீதி 4:23)***

கர்த்தார் சிங் என்பவர் பணக்கார சீக்கியக் குடும்பம் ஒன்றில் பிறந்தவர். அவர் இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டபோது, அவரது தந்தை அவரை விசுவாசத்தினின்று திருப்ப எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டு இறுதியில் பச்வான் குன்வர் என்ற அழகிய பெண்ணிடம் எப்படியாவது கர்த்தாரின் மனதை மாற்றும்படிச் சொல்லி அவர் தனியாக இருக்கும்போது அவளை அவரிடம் அனுப்பினார். ஆனால் கர்த்தார் சிங் அவளிடம், "எனக்கு ஒரேயொரு இதயம்தான் உள்ளது. அதை என் ஆண்டவர் இயேசுவுக்கு ஏற்கனவே கொடுத்துவிட்டேன். உனக்குக் கொடுப்பதற்கு வேறே இதயம் எனக்கில்லை" என்று கூறிவிட்டார்.

இதயத்திலிருந்தே தீயவை யாவும் புறப்படுகின்றன (மாற் 7:21,22). "எல்லா வற்றையும்விட இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" (எரே 17:9) என்பது ஆண்டவருக்குத் தெரியும். நமது கல்லான இருதயத்தை நம்மிலிருந்து எடுத்துப்போட்டுச் சதையான இதயத்தை நமக்குக் கொடுப்பதற்காகவே அவர் நமது இதயத்தைக் கேட்கிறார் (எசேக் 36:26 ஆ). அவர் பொறுமையோடு நமது இதயக்கதவைத் தட்டிக்கொண்டேயிருக்கிறார் (வெளி 3:20). நாம் அதைத் திறந்து நமது இதயத்தில் அவருக்கு இடமளித்தால், அவர் நமக்குப் புதிய இதயத்தைக் கொடுத்து, நமது உள்ளத்தைப் புதிய ஆவியால் நிரப்புவார் (எசேக் 36:26அ).

என்றோ ஒருநாள் நமது இதயத்தை ஆண்டவருக்குக் கொடுத்திருக்கலாம். ஆனால் இப்பொழுது நிலை என்ன? மறைவான பாவமேதும் இன்னும் இதயத்தில் இருந்தால் அதை அறிக்கை செய்து விட்டுவிடுவோம் (நீதி 28:13). கடவுளுக்கு விரோதமான உலக சிநேகம், அவருக்கு அருவருப்பான மனமேட்டிமை, எலும்புருக்கி யான பொறாமை போன்றவை இதயத்திலிருந்து அறவே நீங்கிவிட்டனவா என்று ஆராய்ந்துபார்ப்போம் (யாக் 4:4; நீதி 16:5; 14:30). தவறிழைத்த ஒவ்வொருவரிடமும் தாழ்த்தி ஒப்புரவாகி (மத் 5:23,24), எல்லாருடைய தப்பிதங்களையும் இதயபூர்வமாக மன்னிக்க (மத் 6:15) நமது இரட்சகர் விரும்புகிறார்.

அரைகுறையாயல்ல, முழுமனதோடு இறைவனிடம் அன்பு செலுத்துவோம் (மத் 22:37). நமக்காகத் தமது உயிரைக் கொடுத்து தம்மையே தியாகம் செய்த அவருக்குத் தானே நம் இதயம் சொந்தம்! தேவையற்ற குப்பைக் கூளங்களுக்கு இருதயத்தின் மூலையில்கூட இடம்தர வேண்டாம்.

காலைதோறும் இயேசுவின் இரத்தத்தில் நீராடுவோம். பகலவனாம் இயேசுவின் ஒளி நம்மைப் பிரகாசிப்பிக்கட்டும். நமது இதயம் இயேசுவின் கரங்களில் திறந்திருந்தால், நமது பாதை நடுப்பகல்வரை அதிகமாகிக்கொண்டேயிருக்கும் சூரிய ஒளிபோலிருக்கும் (நீதி 4:18).



*மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ — மோட்ச*
*வாழ்வைத் தருவேன், இது பாராயோ?*
*அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே — பாவ*
*அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே! (கீர்த்தனை)*
*— ச. யோசேப்பு, நாகர்கோவில்*